DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR

O.S.NO.363/2018 PW 1

Name நவீன் கிஷோர் Age

Father's Name Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

19.01.2024.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பிரதிவாதிகள் 1 முதல் 5 தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் வாதுரைக்கு நாங்கள் மறுப்பு வாதுரை தாக்கல் செய்யவில்லை என்றால ் சரிதான். வாதசாஆ 3 பாகப்பிரிவினை பத்திரத்தில் பி அட்டவணை சொத்து முதல் பிரதிவாதி சுப்பிரமணி பெயரில் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்துக்களை தாவா எ அட்டவணை சொத்துக்களாக நான் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். வாதசாஆ 3 பாகப்பிரிவினை பத்திரம் முன்னிலைக்கு முதல் வாதி சுப்பிரமணிக்கு பாப்பா நாயுடு எழுதி கொடுத்த உயிலின் காரணமாக பி அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். உயிலின் அடிப்படையில் தாவா எ அட்டவணை சொத்து முதல் பிரதிவாதிக்கு கிடைத்த காரணத்தினால் அதில் நான் பாகம் கோரமுடியாது என்றால் சரியல்ல. தாவா சி அட்டவணை சொத்தில் 1 முதல் 5 ஐட்டங்கள் முதல் பிரதிவாதியின் தாயார் கமலம்மாளுக்கு மேற்படி பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். 06.04.1993ல் கமலம்மாள் அவரது மகள் இரண்டாவது பிரதிவாதிக்கு உயில் எழுதிவைத்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இரண்டாவது பிரதிவாதிக்கு மட்டும் அந்த சொத்தில் உரிமை உண்டு என்ற காரணத்தினால் மேற்படி சொத்தில் பாகம் கோரமுடியாது என்றால் சரியல்ல. வாதசாஆ 3 பாகப்பிரிவினை பத்திரத்தில் சி அட்டவணை சொத்து முதல் பிரதிவாதிக்கு அவரது தாயாருக்கும் ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். வாதசாஆ 4

முன்னிலைக்கு முதல் பிரதிவாதியும் அவரது தாயாரும் அந்த சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். வாதசாஆ 4 பாகப்பிரிவினை பத்திரம் முன்னிலைக்கு முதல் பிரதிவாதிக்கு வந்த பாகத்தை தாவா பி அட்டவணை சொத்தாக நான் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சி அட்டவணை சொத்தில் எந்த சொத்துக்கள் பூர்விகமாக கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் என்று குறிப்பிட்டு நான் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சி அட்டவணை சொத்தில் ஐட்டம் 14, 32 மற்றும் 49 பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்துக்கள் கிடையாது என்றால் சரியல்ல. அதேபோல் தாவா சி அட்டவணை சொத்து 10, 12, 34, 35 மற்றும் 41 முதல் 47 வரை உள்ள சொத்துக்கள் பாப்பா நாயுடு சொந்தமானது என்று சொன்னால் அவரிடமிருந்து முதல் பிரதிவாதிக்கு மாற்றம் ஆகிவிட்டது. பாப்பா நாயுடு அந்த சொத்துக்களை முதல் பிரதிவாதியின் தாயார் கமலம்மாள் பெயரில் 20.09.1966ல் செட்டில்மென்ட் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரியல்ல. எனவே மேற்படி சொத்துக்கள் பூர்விக சொத்துக்கள் என்பது சரியல்ல என்றாலும் கமலம்மாளின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. தாவா சி அட்டவணை சொத்தில் ஐட்டம் 6 முதல் 9, 11, 13, 15 முதல் 17, 20 முதல் 27, 29 முதல் 31, 33, 36 முதல் 40, 48 மற்றும் 49 சொத்துக்கள் முதல் பிரதிவாதி கமலம்மாளின் தாயாரான பொட்டியம்மாளுக்கு சொந்தமானது என்றாலும் அவற்றை கமலம்மாள் பெயருக்கு அவரது தாயார் பொட்டியம்மாள் உயில் எழுதிவைத்துவிட்டார் என்றாலும் தாவா சி அட்டவணை சொத்தில் ஐட்டம் 47 சொத்தை பொட்டியம்மாள் அவரது பேத்தியான இரண்டாம் பிரதிவாதி மற்றும் அவரது கணவருக்கு உயில் எழுதிவைத்துவிட்டார் என்றால் சரியல்ல. பொட்டியம்மாள் முதல் பிரதிவாதிக்கு அனைத்து சொத்துக்களையும் உயில் எழுதிவைத்துவிட்டார். நான் தவறாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. கமலம்மாள் தனது தாயார் பொட்டியம்மாள் மற்றும் பாப்பா நாயுடு எழுதிவைத்த சொத்துக்களை முதல் பிரதிவாதிக்கு உயில் எழுதிவைத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்துக்கள் உயில் மூலமாக முதல் பிரதிவாதிக்கு கிடைத்த காரணத்தினால் அது அவரது தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல.

இரண்டாம் பிரதிவாதிக்கு தாவா சி அட்டவணை சொத்தில் 1 முதல் 5, 48 சொந்தமானது என்றால் சரியல்ல. தாவா மற்ற சொத்துக்கள் முதல் பிரதிவாதிக்கு பாகப்பிரிவினை மற்றும ் உயில் மூலமாக கிடைத்த காரணத்தினால் அவை அவரது தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் தாவா சொத்துக்கள் பூர்விக சொத்துக்கள் என்கின்ற அடையாளத்தை இழந்துவிட்டது என்றாலும் எனவே தாவா சொத்தில் நான் பாகம்கோரமுடியாது என்றால் சரியல்ல. வாதசாஆ 3 பாகப்பிரிவினை பத்திரத்தில் ஏற்கனவே நடந்த வாய்மொழி பாகத்தை எழுத்து மூலமாக எழுதிகொண்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொத்துக்கள் எங்கே உள்ளது என்று எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். நான் சொத்துக்களை அனுபவித்தது கிடையாது என்றால் சரிதான். எனக்காக எனது தாயார் மற்றும் அவரின் தகப்பனார் பாகம் கேட்டார்கள். நான் பள்ளி படித்த காலத்தில் பாகம் கேட்டார்கள். 27.06.1988ல் நான் பிறந்தேன். நான் 2016ல் தனிப்பட்ட முறையில் பாகம் கேட்டேன். அதற்கு முன்பாக நான் கேட்கவில்லை. தனிப்பட்ட முறையில் நான் கேட்கவில்லை. நான் மேஜரான மூன்று வருட காலத்திற்குள் பாகம் கேட்டிருக்கவேண்டும் என்றாலும் எனவே தாவா காலதோஷத்தால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி தனது தனிப்பட்ட தேவைக்காக தாவா சொத்துக்களை பிரதிவாதிகள் 2 முதல் 5க்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றாலும் எனவே சொத்தில் நான் பாகம் கோரமுடியாது என்றால் சரியல்ல. 2017ல் தான் கிரைய பத்திரம் எழுதியவிவரம் எனக்கு தெரியும். அதற்கு முன்பாகவே எனக்கு முதல் பிரதிவாதி ஏற்படுத்திய கிரையம் எனக்கு தெரியும ் என்றாலும் வழக்கிற்காக 2017ல் தான் தெரியும் என்று பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செய்வதற்கு முன்பாக முன்அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் பிரச்சனை செய்வதாக முதல் பிரதிவாதி என் மீது காவல் ் நிலையத்தில் புகார் கொடுத்தார ் என்றால் அது பொய்யான புகார். போலீஸ் உயர் அதிகாரியிடம் புகார் கொடுக்கப்பட்டு என்னை விசாரித்தார்கள் ் என்றால்

சரியல்ல. எனது தாயாருக்கும் முதல் பிரதிவாதிக்கும் திருமணம் ஆகி சில மாதங்களுக்கு பிறகு பிரிந்து வாழ்ந்தார்கள் என்றாலும் வரதட்சணை கொடுமைக்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அது தள்ளுபடி ஆகி பிறகு விவகாரத்து ஆகிவிட்டது என்றால் வரதட்சணை வழக்கு தள்ளுபடி ஆனாத என்பது தெரியாது விவாகரத்து ஆகிவிட்டது. எனது தாயார் மறுமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். எனது தாயாரின் துண்டுதலின் பெயரில் பணம் பறிப்பதற்காக முதல் பிரதிவாதிக்கு எதிராக இந்த பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தாயாருக்கும் முதல் பிரதிவாதிக்கும் தாம்பத்திய உறவு ஏற்படவில்லை என்றாலும் எனவே சட்டபடியான பிறந்த மகன் என்றால் சரியல்ல. எனவே தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை 7வது பிரதிவாதிக்காக**

நான்காம் பிரதிவாதி 7ம் பிரதிவாதியான யூகோ வங்கியில் அடமான போட்டுயிருப்பதாக யூகோ வங்கியும் இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். அடமானம் நிலுவையில் உள்ளதா என்று எனக்கு தெரியாது. அந்த அடமானம் ரத்து செய்யப்படவேண்டும் என நான் 'கோரியுள்ள பரிகாரம் காலதோஷத்தால் பாதிக்கப்பட்டது என்றால' சரியல்ல.